[1978 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஒரே பொருள் உள்ள கேள்விகள் இரண்டு மூன்று முறைகளில் வரக் கூடாது என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இதைப் பற்றி கவனிக் கிறேன்.

(4) கூவத்திலிருந்து வரும் நாற்றத்தால் உறுப்பினர் விடுதியில் தங்கும் உறுப்பினர்களை பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்னையை இங்கே கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தங்கள் பணியைச் செய்வதற்கு நான் சொல்வது உதவிகரமாக இருக்கும் என்ற வகையில் தான் இந்த ஒழுங்குப் பிரச்னையை நான் இங்கு எழுப்ப விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளை செய்ய முடியாத அளவுக்கு அவர்கள் தங்குகின்ற இடத்தில் இருக்கிறது என்பதை நான் அரசுக்கு, அதன் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் 6-வது மாடியில் இருந்தால் கூட, கூவத்தில் இருந்து வருகின்ற நாற்றம் கபாலக் கோட்டைக்குள் இருக்கின்ற மூளையைக் கூட வெளியேக் கொண்டு வருகின்ற அளவுக்கு—அந்த வாடை இரவு நேரங்களில் வருகிறது. இதை சகித்துக் கொண்டு உறுப்பினர்கள் அங்கு இருக்கவே முடியாது. இதற்கு அரசு ஏதாவது செய்ய வேண்டும். ஒன்று இதை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது வேறு இடங்களை சட்டமன்ற உறுப்பினர் களுக்குத் தர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நாற்றம் சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்குள் வருவதைத் தடுக்க தக்க நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று,

சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதிக்குள் யார் யார் தான் வரவேண்டும் என்ற வரையறை இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் போவதற்கும் வருவதற்கும் இடைஞ்சலாக இருக் கின்ற விதத்தில் பல வகையான சூழ்நிலைகள் இருக்கின்றன. இதையும் அரசு கவனிக்க வேண்டும். ஏனென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம்....

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய அறையில் இருந்தால் அந்த அளவுக்கு நாற்றம் அடிக்கிறது என்பது மட்டுமல்ல, என் னுடைய அறைக்கு பக்கத்திலுள்ள அறையில் ஒரு திருட்டு நடை பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில், நாற்றப் அடிக்கிறது, அதைப் போக்க வேண்டும் என்று சொல்வது அவசர முக்கியத்துவம் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். வேறு இருக்கின்ற விஷயங் களைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம். உறுப் பினர் அவர்கள் 6-வது மாடியில் இருந்து கொண்டு நாற்றம் அடிப்பதைப் பற்றிச் சொல்லுகிறார். நான் பக்கத்திலேயே இருந்து கொண்டு அனுபவிக்கிறேன்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற பகுதிகளில் இருக் கின்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற நாற்றத்தை எல்லாம் சகித்துக் கொண்டு வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நாற்றத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும் என்று நான் வாதாடவில்லை. இந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

(5) அறிவிப்புகள்.

(அ) பேரவையின் அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவை யின் அலுவல்கள் பற்றிய விவரம்:

1978–79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(திரு. கூத்தக்குடி ச. சண்முகம் எழுந்தார்)........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே என் அறிவிப்பை வாசிக்கத் தொடங்கி விட்டேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கேள்வியைப் பின்னால் எழுப்பலாம்.